# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2020

# முன்னோடி வினாத்தாள்

## மட்டம் I

# 103 – பொருளியல் (ECN)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# 103 – பொருளியல் [ECN]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

விடையெழுத: 03 மணித்தியாலங்கள்

**வினாத்தாளின் கட்டமைப்பு:**

- இந்த வினாத்தாள் பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C எனும் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C ஆகிய பகுதிகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| **பகுதி** | **புள்ளிகள்** |
|---|---|
| பகுதி A | 40 |
| பகுதி B | 40 |
| பகுதி C | 20 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50%.

**விடைகள்:**

- சகல விடைகளும் உமக்குத் தரப்படும் விடைப் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். வினாத்தாளில் எழுதப்படும் விடைகள் புள்ளியிடலுக்காகக் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான விடையினை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- எல்லாச் செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களுள் எழுதலாகாது.

**விடைப் புத்தகங்கள்:**

- ஒவ்வொரு விடைப் புத்தகத்தின் முகப்பு அட்டையிலும் அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சர கணிதம் மற்றும் வகையீட்டு வசதிகள் அற்ற எந்தவொரு கணிப்பானையும் பயன்படுத்தலாம். திட்டமிடக்கூடிய கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**இணைப்பு:**

- செயல் வினைச்சொல் செவ்வைநிரல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது (நோக்கச் சோதனை வினாக்கள் தவிர). பரீட்சார்த்திகள் வினைச்சொல் செவ்வைநிரலில் தரப்பட்டுள்ள பொருள் வரையறைகளின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

**இருபது (20) கட்டாய வினாக்கள்**

**பகுதி A**

(மொத்தம் 40 புள்ளிகள்)

## *வினா 01*

**இல. 1.1 தொடக்கம் 1.10 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

**1.1** பின்வருவனவற்றிலிருந்து வளங்களின் அரிதான தன்மையினை (scarcity) விபரிக்கின்ற கூற்றைத் தெரிவு செய்க:


(1) கேள்வியும் நிரம்பலும் சந்தையில் காணப்படும்போது இது இருக்கிறது.

(2) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் மாத்திரம் இது காணப்படுகிறது.

(3) மனிதத் தேவைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு போதியளவில் இல்லாத வளங்களின் கிடைப்பனவின்போது இது காணப்படுகிறது.

(4) வளங்கள் சரியாக ஒதுக்கீடு செய்யப்படாதபோது இது காணப்படுகிறது.

**1.2** பொருளாதாரமொன்றின் உற்பத்திச் சாத்திய எல்லைக்கோட்டினை கீழேயுள்ள வரைபடம் காட்டுகின்றது.




மேலுள்ள வரைபடத்திற்கு இணங்க, புள்ளி X இனால் காட்டப்படுவது:

(1) நிறை தொழில்

(2) குறைவான தொழில்

(2) பொருளாதார மந்தநிலை

(4) பொருளாதார வளர்ச்சி

**1.3** குறைந்துசெல்லும் எல்லைப் பயன் விதி குறிப்பிடுவது:

(1) ஒரு பொருளின் அதிகதிகமான அலகுகள் நுகரப்படும்போது ஒவ்வொரு மேலதிக அலகிலிருந்தும் பெறப்படும் திருப்தியானது குறைவடையும்.

(2) அதிகதிகமாக பொருட்கள் நுகரப்படும்போது மொத்தத் திருப்தி குறைந்துசெல்லும்.

(3) அதிகதிகமாக பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்போது விலை குறைவடையும்.

(4) அதிகதிகமாக பொருட்கள் நுகரப்படும்போது மொத்தத் திருப்தி அதிகரிக்கும்.

**1.4** போட்டிச் சந்தையொன்றிலுள்ள குறிப்பிட்டதொரு பொருளுக்கான சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் தரப்படுகின்றன:

$$Q_D = 150 - 10P \qquad Q_S = -50 + 10P$$

சந்தைச் சமநிலையில் கேள்வியின் விலை நெகிழ்ச்சி (Price elasticity):

(1) -1.0 (2) -0.8 (3) -1.8 (4) -2.0

**1.5** பண்டமொன்றின் கேள்வி வளையி இடப்பக்கமாக நகர்வதில் பின்வரும் காரணங்களில் எது தாக்கம் செலுத்துகிறது?

(1) அந்தப் பண்டத்தின் விலையில் ஏற்படும் குறைவு

(2) அந்தப் பண்டத்தின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு

(3) நுகர்வோர் வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு

(4) நுகர்வோர் வருமானத்தில் ஏற்படும் குறைவு

**1.6** குறிப்பிட்ட பொருளாதாரம் ஒன்றிற்கான பின்வரும் தேசிய வருமானக் கணக்கு விபரங்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

| | **ரூபா (மில்லியன்)** |
|---|---|
| தனியார் நுகர்வு | 24,000 |
| மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம் | 36,000 |
| அரசாங்கத்தின் நுகர்வு | 14,000 |
| தொக்குகளின் மாற்றங்கள் | 2,500 |
| உற்பத்திப்பொருட்கள் மீதான நிகர வரி | 5,000 |
| நிகர ஏற்றுமதிகள் | -4,000 |

இந்தப் பொருளாதாரத்தின் சந்தை விலையில் மொத்த உள்நாட்டுச் செலவினம் (ரூபா மில்லியனில்):

(1) 70,000. (2) 74,000. (3) 79,000. (4) 76,500.

**1.7** குறுகிய பண நிரம்பல், வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் கால மற்றும் சேமிப்பு வைப்புகள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

(1) பண அடிப்படை (2) விரிந்த பணப் பெருக்கி

(3) திரட்டிய விரிந்த பண நிரம்பல் (4) விரிந்த பண நிரம்பல்

**1.8** உங்களுக்குப் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

| நாடு | கூலி மணித்தியாலம் ஒன்றிற்கான ஆடைத் தயாரிப்பு | கூலி மணித்தியாலம் ஒன்றிற்கான தேயிலை உற்பத்தி |
|---|---|---|
| இலங்கை | 8 | 20 |
| இந்தோனேசியா | 10 | 15 |

மேலுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றிலிருந்து சரியான கூற்றைத் தெரிவு செய்க:

(1) தேயிலை உற்பத்தியில் இலங்கை ஒப்பீட்டு நயத்தைக் கொண்டிருக்கிறது.

(2) ஆடைத் தயாரிப்பில் இலங்கையும் இந்தோனேசியாவும் ஒப்பீட்டு நயத்தைக் கொண்டிருக் கின்றன.

(3) ஆடைத் தயாரிப்பில் இலங்கை முழு நயத்தைக் கொண்டிருக்கிறது.

(4) தேயிலை உற்பத்தியில் இந்தோனேசியா முழு நயத்தைக் கொண்டிருக்கிறது.

**1.9** ஒரு நாட்டினது சென்மதி நிலுவைக் கணக்கினது நிதிக் கணக்கினுள் உள்ளடக்கப்படுவது பின்வருவனவற்றுள் எது?

(1) வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவு

(2) முதலீட்டின்மீது ஈட்டப்பட்ட வட்டி

(3) பொருட்களின் வணிகம்

(4) நேரடி வெளிநாட்டு முதலீடு

**1.10** நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியான அனைத்து நாடுகளும் ஒப்புக்கொண்ட நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கு என்ன?

(1) பசியின்மை

(2) வறுமையின்மை

(3) பாலினச் சமத்துவம்

(4) மேற்கூறிய அனைத்தும்.

**இல. 1.11 தொடக்கம் 1.12 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான சரியான சொல் / சொற்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்க:**

**1.11** ஒரு சமூக விஞ்ஞானமான பொருளாதாரமானது மக்களின் ………………….. *(தனிப்பட்ட நடத்தையையும் / பொருளாதார நடத்தையையும்)* சமூகத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளையும் ஆய்வு செய்கிறது.

**1.12** இரண்டு பொருட்களுக்கான கேள்வியின் குறுக்கு விலை நெகிழ்ச்சி நேர்க் கணியமாக இருப்பின், அந்தப் பொருட்கள் ……………………… *(நிரப்பு / பிரதியீட்டு) பொருட்கள் எனப்படும்.*

**இல. 1.13 தொடக்கம் 1.14 வரையான வினாக்களாகத் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியானதா அல்லது தவறானதா எனக் குறிப்பிடுக:**

**1.13** பொருளாதாரக் கிரயமானது உற்பத்தியின் நேரடி மற்றும் மறைமுகக் கிரயங்களைக் கொண்டுள்ளது.

**1.14** எல்லைக் கிரய (MC) வளையியானது சராசரிக் கிரய (AC) வளையியை சராசரிக் கிரய வளையியின் உச்சப் புள்ளியில் இடைவெட்டுகிறது.

**இல. 1.15 தொடக்கம் 1.20 வரையான வினாக்களுக்கான சரியான விடைகளை எழுதுக:**

**1.15** உற்பத்திச் சாத்திய வளையியின் நான்கு (04) எடுகோள்களைக் குறிப்பிடுக.

**1.16** சந்தைப் பொருளாதார முறைமையின் நான்கு (04) பண்பியல்புகளைப் பட்டியலிடுக.

**1.17** விலைக்கும் கேள்விக் கணியத்திற்கும் இடையிலான எதிர்க் கணியத் தொடர்புக்கான இரண்டு (02) காரணங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.18** கேள்வியின் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் இரண்டு (02) காரணிகளைக் குறிப்பிடுக.

**1.19** நுகர்வோர் மிகைக்கும் உற்பத்தியாளர் மிகைக்கும் இடையிலான வேறுபாட்டினைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.20** பண்டமொன்றின் நிரம்பல் வளையி வலப்பக்கமாக நகர்வதற்கான காரணங்கள் இரண்டைக் (02) குறிப்பிடுக.

**(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம் – 40 புள்ளிகள்)**

## *பகுதி A இன் முடிவு*

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**

மொத்தம் 40 புள்ளிகள்

## பகுதி B

## வினா 02

**(a)** (i) பொருளாதாரமொன்றின் பொருளாதார வளங்களை **விபரிக்குக.** **(02 புள்ளிகள்)**

(ii) இலங்கைப் பொருளாதார முறைமையின் வகையை **இனங்காண்க.** உங்களது இனங் காணலுக்கான காரணங்களை **விபரிக்குக.** **(03 புள்ளிகள்)**

**(b)** பண்டம் X இனது கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன:

$Q_D = 300 – 5p$ $Q_S = -50 + 5p$

சந்தைச் சமநிலை விலை மற்றும் கணியத்தைக் **கணிப்பிடுக.** **(03 புள்ளிகள்)**

**(c)** பண்டம் X இற்கான ஆகக் குறைந்த விலையாக ரூபா 40 ஐ விதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது எனக் கருதுக.
குறைந்த விலை காரணமாக தற்போது சந்தைக்கு உற்பத்தியாளரால் எவ்வளவு பண்டத்தினை விநியோகிக்க முடியும் என்பதை **விபரிக்குக.** **(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## *வினா 03*

**(a)** குறுங்கால ஓட்ட உற்பத்திச் செயன்முறையின் நடத்தையை (behavior) **விபரிக்குக.**

**(03 புள்ளிகள்)**

**(b)** வரைபொன்றைப் பயன்படுத்தி நிறை போட்டியின் கீழ், நிறுவனமொன்றின் நீண்டகால ஓட்டச் சமநிலையை **விபரிக்குக.** **(04 புள்ளிகள்)**

**(c)** நிறை போட்டிச் சந்தைக்கும் தனியுரிமைச் சந்தைக்குமிடையிலான மூன்று (03) வேறுபாடுகளைக் **குறிப்பிடுக.**

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## *வினா 04*

**(a)** பணத்திற்கான பரிமாற்றக் (transaction) கேள்விக்கும் பணத்திற்கான ஊகக் (speculative) கேள்விக்குமிடையிலான வேறுபாடுகளை **விபரிக்குக.** **(04 புள்ளிகள்)**

**(b)** "பணமானது சந்தையொன்றில் மிக முக்கியமானதொரு பங்கை வகிக்கிறது".

இந்தக் கூற்றின் செல்லுபடித்தன்மைக்கான (validity) மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.**

**(03 புள்ளிகள்)**

**(c)** கேள்வி இழுப்பு பணவீக்கத்திற்கும் (demand pull inflation) கிரயத் தள்ளல் பணவீக்கத்திற்கும் (cost push inflation) இடையிலான வேறுபாடுகளை **விபரிக்குக.** **(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## *வினா 05*

**(a)** (i) வியாபாரச் சுழற்சி (business cycle) என்பதாற் கருதப்படுவது யாதென **விபரிக்குக.**

**(02 புள்ளிகள்)**

(ii) வியாபாரச் சுழற்சியின் இரண்டு (02) கட்டங்களை (stages) **விபரிக்குக.** **(02 புள்ளிகள்)**

**(b)** முழு நயத்திற்கும் ஒப்பீட்டு நயத்திற்குமிடையிலான வேறுபாடுகளை **விபரிக்குக.** **(02 புள்ளிகள்)**

**(c)** அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயினது மதிப்பிறக்கத்தின் விளைவுகளை (consequences of devaluation) **விபரிக்குக.** **(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## *பகுதி B இன் முடிவு*

**ஒரு (01) கட்டாய வினா**

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி C

***வினா 06***

**(a)** (i) சந்தைத் தோல்வி (market failure) என்பதாற் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** **(01 புள்ளி)**

(ii) சந்தைத் தோல்விக்கான மூன்று (03) காரணங்களைக் **குறிப்பிடுக.** **(03 புள்ளிகள்)**

**(b)** ஒரு நாட்டினது பேரினப் பொருளாதார நோக்கங்கள் (macro-economic objectives) நான்கினை (04) **விபரிக்குக.** **(04 புள்ளிகள்)**

**(c)** பொருளாதாரமொன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய ஒரு வருட காலப்பகுதிக்கான பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

| **உருப்படி** | **பெறுமதி (ரூபா மில்லியனில்)** |
|---|---|
| ஊழியர்களின் நட்டஈடு | 4,500 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 8,200 |
| நிலையான மூலதன நுகர்வு | 700 |
| உற்பத்தி மீதான ஏனைய வரி குறைப்பு மானியங்கள் (Other tax less subsidies) | 100 |
| பொருட்கள் மீதான நிகர வரி | 1,200 |
| உலகின் பிற பகுதிகளிலிருந்தான (from the rest of the world) நிகர முதன்மை வருமானம் | -800 |

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்யவேண்டியவை,**

பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக**:

(i) மொத்த பெறுமதி சேர்த்தல் (GVA) – அடிப்படை விலையில் **(02 புள்ளிகள்)**

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் **(02 புள்ளிகள்)**

(iii) மொத்த தேசிய வருமானம் (GNI) **(02 புள்ளிகள்)**

**(d)** வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மைக்கும் (liquidity) இலாபத்தன்மைக்கும் (profitability) இடையிலான தொடர்பினை **விபரிக்குக.** **(03 புள்ளிகள்)**

**(e)** புதிய உலகளாவிய பொருளாதாரப் போக்குகள் மூன்றினை (03) **இனங்காண்க**. **(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

***பகுதி C இன் முடிவு***

# செயல் வினைச்சொல் செவ்வைநிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக்கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | பகுப்பாய்வு செய்தல் (Analyze) | தீர்வினை அல்லது பேறினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங் களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | முடிவொன்றை அடையும் நோக்கில் விவாதம் மூலம் விபரமாகப் பரீட்சித்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காகப் ஆய்வு செய்தல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக (Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | தொடர்பாடுக (Communicate) | தகவல்களைப் பங்கிடுதல் அல்லது பகிர்தல் |
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றுதலும் | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | | எடுத்துக்காட்டுடன் விபரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | தயாரிக்குக (Prepare) | கேட்கப்பட்ட விடயத்தை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடு அல்லது விளக்கங்கள் மூலம் தீர்வு காணல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | வரைபுத்தாளில் வரைக (Graph) | வரைபடங்கள் மூலம் காட்டுதல் |
| | | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile) | வேறொன்றுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தல் | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக (Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret) | விளங்கக்கூடிய வகையில் தெளிவுபடுத்துதல் |
| | | ஏற்பிசைவு செய்தல் (Recognize) | அறிவை அல்லது அது சார்ந்த அனுபவத்தைக் கொண்டு செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| அறிவு (1) | விடயங்களை ஞாபகப்படுத்தலும் அடிப்படை எண்ணக்கருக்களும் | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2020

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# மட்டம் I

# 103 – பொருளியல் (ECN)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQS)**

**பகுதி A**

**வினா 01 இற்கான விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1.1** | (3) | **1.6** | (2) | **1.11** | பொருளாதார நடத்தை |
| **1.2** | (2) | **1.7** | (4) | **1.12** | பிரதியீட்டு |
| **1.3** | (1) | **1.8** | (1) | **1.13** | சரியானது |
| **1.4** | (4) | **1.9** | (4) | **1.14** | தவறானது |
| **1.5** | (4) | **1.10** | (4) | | |

**1.15**
- வளங்களின் நிறை தொழில்
- கிடைக்கக்கூடிய சிறந்த தொழில்நுட்பவியல் பயன்படுத்தப்படுவதுடன் அது மாறாதுள்ளது.
- இரண்டு வகையான பொருட்கள் மாத்திரமே உற்பத்தி செய்யப்படுகின்றன.
- இது தரப்பட்ட காலப்பகுதி ஒன்றிற்காகத் தயாரிக்கப்படுகின்றது.

**1.16**
- சகல வளங்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தனியார் துறைக்குச் சொந்தமானது.
- நுகர்வோர் இறையாண்மையைக் (சுதந்திரம்) கொண்டிருக்கின்றனர்.
- உற்பத்தியாளர்கள் இறையாண்மையைக் (சுதந்திரம்) கொண்டிருக்கின்றனர்.
- அரசாங்கத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட வகிபாகம்.
- விலைப் பொறிமுறையின் தொழிற்பாடுகள்.
- தனியார் துறையானது இலாபங்களால் ஊக்குவிக்கப்படுகின்றது.
- பண்டங்களின் விலைகள், கேள்வி மற்றும் நிரம்பல் என்பன சந்தைச் சக்திகளின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றன.

**1.17** (1) வருமான விளைவு:

உற்பத்திப் பொருள் ஒன்றின் விலைகள் மாற்றமடையும்போது, நுகர்வோரின் உண்மையான வருமானம் (கொள்வனவு செய்யும் திறன்) மாற்றமடைகின்றது. இதனால், தனது பண வருமானத்திலிருந்து கொள்வனவு செய்யக்கூடிய அலகுகளின் எண்ணிக்கை மாற்றமடையும். உதாரணமாக, ஒரு பண்டத்தின் விலை வீழ்ச்சியடையும்போது, தனிநபர் ஒருவரின் கொள்வனவு செய்யும் திறன் அதிகரிக்கிறது. இது அதிகளவு எண்ணிக்கை யிலான அலகுகளைக் கொள்வனவு செய்ய அனுமதிக்கிறது. இது வருமான விளைவு என அழைக்கப்படுகின்றது.

(2) பிரதியீட்டு விளைவு:

ஒரு பண்டத்தின் விலை வீழ்ச்சியடையும்போது, மற்றைய பிரதியீட்டுப் பொருட்கள் தொடர்பான சந்தையில் இது மலிவானதாகிறது. எனவே, ஒரு தனிநபர் சாதாரணமாக பிரதியீட்டுப் பொருட்களைவிட இந்தப் பொருளை அதிகமாகக் கொள்வனவு செய்கின்றனர். உதாரணமாக, தேயிலையின் விலை வீழ்ச்சியடையும் அதே நேரம் கோப்பியின் விலை மாறாதிருக்குமாயின், அதிகளவில் தேயிலையும் குறைந்தளவில் கோப்பியும் கொள்வனவு செய்யப்படும். இது பிரதியீட்டு விளைவு என அழைக்கப் படுகிறது.

1.18 - அருகிலுள்ள பிரதியீட்டுப் பொருட்களின் கிடைப்பனவுத்தன்மை


– பொருட்களின் தன்மை

– நுகர்வோர் பாதீட்டின் பங்கு (share of consumer's budget)

– நேரம் செல்லுதல் (Passage of time)

– பொருட்களை உருவாக்கும் பழக்கம் (Habit forming goods)

1.19 நுகர்வோர் மிகை என்பது பொருள் அல்லது சேவை ஒன்றிற்காக நுகர்வோர் கொடுப்பனவு செய்ய விரும்புகின்ற மற்றும் இயலக்கூடிய மொத்தத் தொகைக்கும் அவர்கள் உண்மையாக கொடுப்பனவு செய்கின்ற மொத்தத் தொகைக்குமிடையிலான வேறுபாடு ஆகும். உற்பத்தியாளர் மிகை என்பது பொருள் ஒன்றை வழங்கல் செய்வதற்கு உற்பத்தியாளர்கள் விரும்புகின்ற மற்றும் இயலக்கூடிய விலைக்கும் உண்மையில் அவர்களுக்குக் கிடைத்த விலைக்கும் இடையிலான வேறுபாடு ஆகும்.




1.20 - தொடர்புபட்ட பொருட்களின் விலையில் ஏற்படும் வீழ்ச்சி

- உள்ளீடுகளின் விலைகளில் ஏற்படும் வீழ்ச்சி

- அபிவிருத்தித் தொழினுட்பவியல்

- அரசாங்க வரிகளின் குறைப்பும் மானியங்களின் வழங்கலும்

- எதிர்காலத்தில் விலை குறைவடையும் என்ற எதிர்பார்ப்பு

**(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் – 40 புள்ளிகள்)**

## *பகுதி A இன் முடிவு*

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் 40 புள்ளிகள்)

**பகுதி B**

**வினா 02 இற்கான விடைகள்**

**அலகு 1 – வியாபாரச் சூழலுடன் தொடர்புடைய பொருளாதார எண்ணக்கருக்களும் முறைமைகளும்**
**அலகு 2 – கேள்வி, நிரம்பல், சமநிலை மற்றும் அரசாங்கம் தலையீடு செய்யும் வழிமுறைகள்**

கற்றற் பேறுகள் - பொருளாதார வளங்களையும் பொருளாதாரமற்ற வளங்களையும் விபரித்தல்
- பொருளாதார வகைகளின் பல்வேறு வகைகளை விபரித்தல்
- கேள்வி மற்றும் நிரம்பல் கோட்பாட்டினைப் பகுப்பாய்வு செய்தல்

**(a)** (i) **காணி**

உற்பத்தி நடவடிக்கைகளுக்குக் கிடைக்கக்கூடிய இயற்கை அன்னையின் பரிசுகளான சகல வளங்களையும் காணி உள்ளடக்குகிறது. வாடகை என்பது காணியைப் பயன்படுத்து வதற்கான கொடுப்பனவு அல்லது வெகுமதி ஆகும்.

உதாரணம்: ஆறுகள், கனிமங்கள்

**உழைப்பு**

கூலி என்பது உற்பத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் மனிதனின் உடல் மற்றும் அறிவுத் திறன்கள் என வரையறுக்கப்படுகின்றது. கூலி அல்லது சம்பளம் என்பது உழைப்புக்கான கொடுப்பனவாகும்.

**மூலதனம்**

மூலதனம் என்பது உற்பத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுகின்ற மனிதனால் உருவாக்கப்படுகின்ற வளங்களாகும். இது பௌதிக ரீதியான மரம், இயந்திரம், தொழிற்சாலைக் கட்டிடம் போன்றவற்றை உள்ளடக்குகிறது. வட்டி என்பது மூலதனத்திற்கான வெகுமதி ஆகும்.

**தொழில்முயற்சியாண்மை**

தொழில்முயற்சியாண்மை என்பது படைப்புத் திறனை வளப்படுத்துகின்ற ஒரு விசேட வகை உழைப்பாகும். மிகச் சிறிய எண்ணிக்கையிலான மக்களே வியாபார இடர்களைத் துணிந்து ஏற்றுக்கொள்ள விரும்புவதால் இது ஒரு அரிதான வளமாக இருக்கிறது. இலாபம் என்பது தொழில்முயற்சியாண்மைக்கான வெகுமதி ஆகும். **(02 புள்ளிகள்)**

(ii) இலங்கைப் பொருளாதாரம் ஒரு கலப்புப் பொருளாதாரமாகும். சந்தைப் பொருளாதாரத் தினதும் சமவுடைமைப் பொருளாதாரத்தினதும் அம்சங்களை இலங்கை பொருளாதாரத்தில் காணலாம். தனியார் துறையினர், பொருளாதாரத்தை இயக்குகின்ற அதேவேளை அரசாங்கமானது கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளை வழங்குகிறது. **(03 புள்ளிகள்)**

**(b)** 300 - 5P = -50 + 5p

10P = 350

P = 35

$Q_D$ = 300 – 5 (35)

Q = 125 **(03 புள்ளிகள்)**

**(C)** Q = - 50 + 5 (40)

= -50 + 200

= 150 **(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 03 இற்கான விடைகள்

**அலகு 3 – உற்பத்திச் செயன்முறையின் நடத்தையும் பல்வேறு சந்தைக் கட்டமைப்புகளும்**


கற்றற் பேறுகள் – உற்பத்திச் செயன்முறையின் உற்பத்திக் கிரய நடத்தையினை விபரித்தல்

- பல்வேறு சந்தைக் கட்டமைப்புகளையும் அவற்றின் பண்பியல்புகளையும் ஆராய்தல்

**(a)** குறுங்கால ஓட்ட உற்பத்திச் செயன்முறையில், குறைந்துசெல்லும் எல்லை விளைவு விதியானது குறுங்கால ஓட்டத்தின் வெளியீட்டின் நடத்தையைத் தீர்மானிக்கிறது. உற்பத்தியின் நிலையான காரணியொன்றுடன் உற்பத்தியின் மாறும் காரணியொன்று மேலும் மேலும் பயன்படுத்தப்பட்டால், எல்லை உற்பத்தியும் சராசரி உற்பத்தியும் இறுதியில் குறைவடையும். குறுங்கால ஓட்டத்தில் மாறும் உள்ளீடுகளை மாற்றி, நிலையான உள்ளீடுகளை நிலையாகப் பேணுவதன் மூலம் மாத்திரமே உற்பத்தி அதிகரிக்கப்படுகின்றது.

**(03 புள்ளிகள்)**

**(b)** நீண்டகால ஓட்டத்தில், தற்போதிருக்கின்ற நிறுவனங்களுக்குப் போட்டியாக சந்தையில் புதிய நிறுவனங்கள் நுழைய முடியும். நிறைபோட்டியின்கீழ், கேள்வி வளையியானது (விலை) எல்லைக் கிரய (MC) வளையியையும் சராசரிக் கிரய (AC) வளையியின் இழிவுப் புள்ளியிலும் இடைவெட்டு மிடத்தில் நிறுவனச் சமநிலை ஏற்படுகிறது.




**(04 புள்ளிகள்)**

(c)

| | நிறைபோட்டிச் சந்தை | தனியுரிமைச் சந்தை |
|---|---|---|
| 1. | அதிகளவிலான விற்பனையாளர்கள் | தனியொரு விற்பனையாளர் |
| 2. | ஓரினமான பொருட்கள் | குறிப்பிட்ட பொருட்கள் |
| 3. | தடங்கலற்ற நுழைவும் வெளியேறுகையும் | நுழைவதற்கு தடைகள் காணப்படல் |
| 4. | நிறுவனங்கள் விலையை ஏற்பவர்களாக இருக்கின்றனர். | நிறுவனங்கள் விலையை நிர்ணயிப்பவர்களாக இருக்கின்றனர் |
| 5. | நிறுவனங்கள் பூரண நெகிழ்ச்சி கொண்ட கேள்வி வளையியைக் காட்டுகின்றன | நிறுவனங்கள் கீழ்நோக்கிய சாய்வுடனான கேள்வி வளையியைக் காட்டுகின்றன |

**(03 வேறுபாடுகளுக்கு, 03 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 04 இற்கான விடைகள்

**அலகு 5 – நிதி முறைமை, பணம் மற்றும் பொது விலை மட்டம்**

கற்றற் பேறுகள் – பணத்தின் தொழிற்பாடுகள், பணத்திற்கான கேள்வி மற்றும் பண நிரம்பல் ஆகியவற்றை விபரித்தல்

– பண நிரம்பல் மற்றும் கேள்வியின் அடிப்படைகள், வட்டி வீதங்கள், விலை மட்டம் மற்றும் பணவீக்கம் ஆகியவற்றை விபரித்தல்

(a)

(1) பணத்திற்கான பரிமாற்றக் கேள்வியானது பரிமாற்ற ஊடகமொன்றாக பணத்தின் தொழிற்பாடு களுடன் தொடர்புடையதாகும். பணத்திற்கான ஊகக் கேள்வியானது செல்வத்தின் களஞ்சியமொன்றாக பணத்தின் தொழிற்பாடுகளுடன் தொடர்புடையது.

(2) வீடுகள் மற்றும் நிறுவனங்களின் கொடுப்பனவுகளும் பெறுவனவுகளும் சரியானவாறு ஒத்திசைவாவதில்லை என்பதால், கொடுப்பனவுகளுக்கும் பெறுவனவுகளுக்குமிடையிலான இடைவெளியை நிரப்புவதற்காக அவர்களுடைய வருமானத்தில் ஒரு சிறிய தொகையை பணத்தின் வடிவில் வைத்திருக்க வேண்டியுள்ளது. இந்த நோக்கத்திற்காக மக்கள் வைத்திருக்கும் பணத்தொகையானது பணத்திற்கான பரிமாற்றக் கேள்வி என அழைக்கப் படுகின்றது. மக்கள், முறிகளில் முதலீடு செய்வதற்காக அவர்களுடைய வருமானத்தில் குறிப்பிட்ட தொகையினை பண வடிவில் வைத்திருக்க விரும்புகின்றனர். மக்கள் இந்த நோக்கத்திற்காக வைத்திருக்க விரும்பும் பணத் தொகையானது பணத்திற்கான ஊகக் கேள்வி என அழைக்கப்படுகின்றது.

(3) பணத்திற்கான பரிமாற்றக் கேள்வி வருமான மட்டத்தில் தங்கியிருக்கின்ற அதே வேளை பணத்திற்கான ஊகக் கேள்வி வட்டி வீதத்தில் தங்கியிருக்கிறது. **(04 புள்ளிகள்)**

**(b)** **பரிமாற்று ஊடகம்**

பரிமாற்றங்களை எளிதாக்கும் பொருட்டு பரிமாற்று ஊடகமொன்றாக பணத்தின் மிக முக்கியமான தொழிற்பாடு காணப்படுகின்றது. பணம் இல்லையென்றால், சகல வியாபாரப் பரிமாற்றங்களும் பண்டமாற்று முறை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும்.

**பெறுமதியின் சேமிப்பு**

தனிநபர்கள் தற்போதைய காலகட்டத்தில் நுகர்வைக் கைவிடவும் எதிர்காலத்தில் தங்களுடைய செலவுசெய்யும் திறனை அதிகரிப்பதற்கு சேமிக்கவும் முடியும். பணவீக்கமானது பணத்தின் உள்ளகக் கொள்வனவுத் திறனை குறைக்கின்ற விளைவைக் கொண்டிருக்கிறது.

**கணக்கின் அலகு**

பணமானது கணக்கின் பொது அலகு ஒன்றாக சார்பு விலைகளையும் பொருட்கள் மற்றும் சேவைகளையும் ரூபாயில் ஒப்பீடு செய்வதற்கு எங்களுக்கு உதவுகிறது.

**பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியமம்**

இது எதிர்காலக் காலப்பகுதி ஒன்றில் இன்று நுகரப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கொடுப்பனவை மேற்கொள்ள அனுமதிக்கிறது.

உதாரணம்: வீடு ஒன்றின்மீதான ஈடு **(03 புள்ளிகள்)**

**(c)** பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான மொத்தக் கேள்வியானது மொத்த நிரம்பலைவிட (வழங்கலைவிட) அதிகமாக இருக்கும்போது கேள்வி இழுப்பு பணவீக்கம் ஏற்படுகிறது. மொத்தக் கேள்வியில் மிகையான வளர்ச்சி காணப்படும்போதும் பணவீக்க இடைவெளியொன்று காணப்படும்போதும் இந்த வகைப் பணவீக்கம் ஏற்படுகிறது.

கிரயத் தள்ளல் பணவீக்கமானது நிரம்பல் (வழங்கல்) பக்கத்திலிருந்து ஏற்படுவதுடன் இது பொதுவாக உற்பத்திக் கிரயத்தில் அதிகரிப்பைத் தோற்றுவிக்கிறது. நிறுவனங்கள் தங்களுடைய உற்பத்திக் கிரய அதிகரிப்பை அனுபவித்ததன் பின்னர் தமது இலாப எல்லையைப் பேணுவதற்காக அல்லது பாதுகாப்பதற்காக விலையை அதிகரிக்கும்போது இது ஏற்படுகிறது.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் - 10 புள்ளிகள்)**

## வினா 05 இற்கான விடைகள்

**அலகு 4 – தேசிய கணக்கீடும் அரசாங்கத்தின் வகிபாகமும்**

**அலகு 6 – சர்வதேச வணிகமும் வெளிநாட்டு நாணயமாற்றச் சந்தையும்**

கற்றற் பேறுகள்
- வியாபாரச் சுழற்சி மற்றும் வியாபாரத்தின் மீது அதன் தாக்கம் ஆகியவற்றை விபரித்தல்
- சர்வதேச வணிகத்தின் கோட்பாடுகளை விபரித்தல்
- வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தையையும் நாணயமாற்று வீதங்களைத் தீர்மானிக்கும் காரணிகளையும் விபரித்தல்

**(a)** (i) வியாபாரச் சுழற்சி என்பது பொருளாதாரமொன்றின் பொருட்கள் மற்றும் சேவைகளது உற்பத்தி வெளியீட்டில் ஏற்படும் உயர்ச்சியும் வீழ்ச்சியும் ஆகும்.

**(02 புள்ளிகள்)**

(ii) <u>விரிவாக்கல் / செழிப்பாக்கல்</u>

இது வேலைவாய்ப்பை (தொழிலை) அதிகரிப்பதன் மூலம் வகைப்படுத்தப்படுகிறது. இது கிடைக்கக்கூடிய வளங்களை 100% பயன்படுத்திக் கொள்ளும் வரை தொடரும்.

<u>உச்சம் (Peak)</u>

இது வியாபாரச் சுழற்சியின் மிகவுயர்ந்த புள்ளி ஆகும். இந்தக் காலப்பகுதியில் வெளியீடு உச்சமாக்கப்படுகிறது. இது நுகர்வுப் பொருட்களது விலையின் அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது.

<u>சுருக்கம் (மந்தநிலை)</u>

பொருளாதாரக் கேள்வியானது உச்சத்தில் தேங்கியிருக்கிறது. பின்னர் மிக விரைவாக குறிப்பிட்ட பொருளாதாரங்கள் சிலவற்றில் கேள்வியானது வீழ்ச்சியடையத் தொடங்குகிறது. விரிவாக்கல் கட்டத்தின் எதிர்க் கட்டமான இது வியாபாரச் சுழற்சியினது சுருக்கக் கட்டத்தின் ஆரம்பமாகும்.

<u>இழிவு (தாழ்ந்த புள்ளி) (Trough)</u>

இது வியாபாரச் சுழற்சியின் மிகக் தாழ்ந்த கட்டமாகும். இது மந்த நிலையின் ஒரு சேவை வடிவமாக இருப்பதுடன் இதன்போது பொருளாதாரத்தின் எதிர்க்கணிய வளர்ச்சியை எங்களால் அவதானிக்க முடியும்.

**(ஏதாவது இரண்டு கட்டங்களுக்கு – 02 புள்ளிகள்)**

**(b)** பண்டமொன்றை உற்பத்தி செய்வதில் ஒரு நாடு மற்றைய நாட்டைவிட மிகவும் வினைத்திறனாக இருக்கும்போது, அந்நாடு அந்தப் பண்டத்தின் உற்பத்தியில் முழு நயத்தைக் கொண்டிருக்கிறது.

ஒரு நாடு இன்னுமொரு நாட்டைவிட குறைந்தளவு சந்தர்ப்பச் செலவில் குறித்ததொரு பொருளை அல்லது சேவையை உற்பத்தி செய்வதற்கான ஆற்றல் ஒப்பீட்டு நயம் என அழைக்கப்படுகின்றது.

**(02 புள்ளிகள்)**

**(C)**

- ரூபாவின் மதிப்பிறக்கமானது பணவீக்கம் ஏற்படக் காரணமாகிறது. ஏனெனில்,
  - ஏற்றுமதிகள் மிகவும் செலவுமிக்கதாக இருக்கும் (ஏதாவது இறக்குமதி செய்யப்பட்ட பொருள் அல்லது மூலப்பொருளின் விலை அதிகரிக்கும்).
  - உற்பத்திக் கிரயம் அதிகரிக்கும் என்பதுடன் அது பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்புக்கு காரணமாக அமையும்.
  - பணவீக்கம் காரணமாக மக்களின் வாழ்க்கைத்தரம் பாதிப்படையும்.
  - இது சென்மதி நிலுவைக் கணக்கின் பற்றாக்குறையை அதிகரிக்கும்.

- பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பு காரணமாக மக்களின் கொள்வனவு செய்யும் திறன் குறைவடையும்.

- உண்மைக் கூலிகள் குறைவடையும். பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்புடன் ஊழியர்களின் உண்மைக் கூலி (real wage) குறைவடையும்.

- பெரியளவான மற்றும் விரைவான மதிப்பிறக்கமானது வெளிநாட்டு முதலீடுகளைப் பாதிக்கும். இது முதலீட்டாளர்கள் நாட்டில் முதலீடு செய்வதற்கு விரும்பாமைக்கு ஏதுவாக அமைகிறது.

- ரூபாயின் மதிப்பிறக்கம் காரணமாக, வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் வட்டியின் மீள்கொடுப்பனவுகள் உயர்வடையும். இது சென்மதிநிலுவைக் கணக்கிலுள்ள பற்றாக்குறை மீதியின் அதிகரிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

**(04 புள்ளிகள்)**

**ஒரு கட்டாய வினா**

**பகுதி C**

**வினா 06 இற்கான விடை**

**அலகு 4 – தேசிய கணக்கீடும் அரசாங்கத்தின் வகிபாகமும்**

**அலகு 5 – நிதி முறைமை, பணம் மற்றும் பொது விலை மட்டம்**

**அலகு 7 – பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் பொருளாதாரத்தின் புதிய போக்குகள்**

கற்றற் பேறுகள்
- பேரின பொருளாதார நோக்கங்களை அடைவதற்கான அரசாங்கத்தின் வகிபாகத்தை விபரித்தல்
- பேரினப் பொருளாதார நோக்கங்களை இனங்காணல்
- மூன்று பிரதான அணுகுமுறைகள் மீதான தேசிய வருமானத்தை கணிப்பிடுதல்
- வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மை மற்றும் இலாபத்தன்மைக்கிடையிலான தொடர்பை விபரித்தல்
- நாட்டின் புதிய போக்குகளை விபரித்தல்

**(a)** (i) வளங்களின் பகிர்வில் காணப்படும் வினைத்திறனின்மை சந்தைத் தோல்வி என அழைக்கப்படுகின்றது. **(01 புள்ளி)**

(ii)

- பொதுப் பொருட்கள் / பாதியளவு பொதுப் பொருட்களின் பற்றாக்குறை
- வெளிப்புறங்கள் (Externalities)

- பூரணமற்ற தகவல்கள்
- குறிப்பிட்ட சந்தைகள் இல்லாமை
- பூரணமற்ற காரணி இயக்கம்
- சமனற்ற வளப் பகிர்வு
- பேரினப் பொருளாதாரத்தின் உறுதியற்ற தன்மை **(03 புள்ளிகள்)**

**(b)** **விலை உறுதித்தன்மை _(Price stability)_**

விலை உறுதித்தன்மையை அடைந்துகொள்வதற்கு, பணவீக்கம் அல்லது பணவாட்டம் போன்ற அழுத்தங்களின்றி பொருளாதாரத்தை முகாமை செய்வது அவசியமாகின்றது. பொருளாதாரமானது மிகக் குறைந்த பணவீக்க வீதத்தை அனுபவிக்கும்போது பொருளாதாரத்தின் சராசரி விலை மட்டம் நிலையானதாக இருக்கிறது எனக் கருதப்படுகின்றது.

**நிறை தொழில் _(full employment)_**

பொருளாதாரத்தின் சகல வளங்களும் உயர்ந்தபட்ச வினைத்திறனுடன் நிறைவாகப் பயன்படுத்தப் படும்போது பொருளாதாரமானது நிறை தொழில் மட்டத்தை அடைகிறது. நிறை தொழில் மட்டத்தை அடைவதை நோக்காகக் கொள்ளும்போது, தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் தொழிலாளர் தொழிலின்றி இருப்பதைக் குறைப்பது அவசியமாகிறது.

**சென்மதி நிலுவைச் _(BOP)_ சமநிலை**

சென்மதி நிலுவைச் சமநிலையை அடையும் பொருட்டு, எல்லைகளைத் தாண்டிய பரிமாற்றங் களைக் மேற்கொள்ளும்போது சென்மதி நிலுவை நெருக்கடி இல்லாமல் பொருளாதாரத்தை முகாமிப்பது முக்கியமானதாகும்.

**நியாயமான வருமானப் பரம்பல்**

ஒரு நாடு அதன் மக்களிடையேயான வருமானப் பரம்பல் நியாயமான மட்டத்தில் காணப்படுவதை உறுதிசெய்வதன் மூலம் சமத்துவத்தை அடையக்கூடியதாக இருக்கிறது. ஒரு நாட்டினது ஒவ்வொரு குடிமகனும் தனது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கான ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை உறுதிசெய்யும் வகையில் வருமானமும் செல்வமும் பகிரப்படுதல் வேண்டும்.

**நிலைபேறான அபிவிருத்தி**

சூழல் தரத்தினைப் பாதுகாக்கின்ற அதேவேளை உற்பத்தி மட்டங்களை உயர்த்துதல் மற்றும் அபிவிருத்தியின் நன்மைகள் மக்களிடையே பகிரப்படுவதை உறுதிப்படுத்தல் என்பனவற்றின் மூலம் ஒரு நாடு நிலைபேறான அபிவிருத்தியை அடையக்கூடியதாக இருக்கிறது. சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் சமூகம் போன்ற அபிவிருத்தியின் சகல அம்சங்களும் நிலைபேறான அபிவிருத்தியாகும்.

**<u>பொருளாதார வளர்ச்சி</u>**

ஒரு நாட்டினது மொத்தத் தேசிய உற்பத்தியின் (GNP) தொடர்ச்சியான அதிகரிப்பு, பொருளாதார வளர்ச்சியென இனங்காணப்படுகிறது.

**(4 நோக்கங்கள் – 4 புள்ளிகள்)**

**(c)** (i) மொத்தப் பெறுமதி சேர்த்தல்கள் - அடிப்படை விலையில்

| | | |
|---|---|---|
| ஊழியர்களின் நட்டஈடு | 4,500 | |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 8,200 | |
| உற்பத்தி மீதான ஏனைய வரிக் குறைப்பு மானியங்கள் | <u>100</u> | |
| GVA – அடிப்படை விலையில் | **<u>ரூபா 12,800 பில்லியன்</u>** | **(02 புள்ளிகள்)** |

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தி – சந்தை விலையில்

| | | |
|---|---|---|
| மொத்தப் பெறுமதி – அடிப்படை விலையில் | 12,800 | |
| **கூட்டு** | | |
| பொருட்கள் மீதான நிகர வரி | <u>1,200</u> | |
| GDP – சந்தை விலையில் | **<u>ரூபா 14,000 பில்லியன்</u>** | **(02 புள்ளிகள்)** |

(iii) மொத்த தேசிய வருமானம்

| | | |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (MP) | 14,000 | |
| **கூட்டு** | | |
| உலகின் பிற பகுதிகளிலிருந்தான நிகர முதன்மை வருமானம் | <u>( 800)</u> | |
| மொத்த தேசிய வருமானம் | **<u>ரூபா 13,200 பில்லியன்</u>** | **(02 புள்ளிகள்)** |

**(d)** வர்த்தக வங்கிகள், ஏனையவர்களிடமிருந்து சேகரிக்கப்படும் நிதியுடன் தமது வியாபாரத்தை மேற்கொள்கின்றன. அத்தகைய வங்கிகளின் நிதி வலிமை பற்றி மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையிலேயே வங்கியொன்றை உருவாக்கும் வைப்புகளின் பெறுமதி தங்கியுள்ளது. அத்தகைய தேவைப்பாட்டினைப் பேணுவதற்காக, வங்கிகள் திரவத்தன்மையைப் பேணுதல் வேண்டும். அதாவது வங்கிகள் அவற்றுடனான திரவத்தன்மையைப் பேணுவதற்காக போதுமானளவு நிதியினை வைத்திருத்தல் வேண்டும். மறுபுறத்தில், வங்கிகள் கடன் வழங்குவதன் ஊடாக இலாபம் ஈட்டுதல் வேண்டும். **(03 புள்ளிகள்)**

**(e)**

- உயர் தொழினுட்பவியல்.      உதாரணம்: AI, Block chain.
- இயற்கை அனர்த்தம் பொருளாதாரத்தைப் பாதிக்கும்.
- சில நாடுகளின் நிதி நெருக்கடி.
- புதிய சட்டத்தின் அறிமுகம், விசேடமாக IT தொடர்பான விடயங்கள்
- ஐக்கிய இராச்சியம், யப்பான், சீனா ஆகிய நாடுகளின் பொருளாதாரம் பலவீனமடையத் தொடங்கியமை
- கொரோனா வைரஸ் காரணமாக உலகளாவிய ரீதியில் பொருளாதாரம் சரிவடைதல்

**(ஏதாவது 3 விடயங்களுக்கு - 03 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**பகுதி C இன் முடிவு**